சக்ரவர்த்தினி.

"கேடில் விழுச்செல்வங் கல்வி ஒருவருக்கு

மாடல்ல மற்றை யவை."

VOL. VI. தொகுதி ௬.	MADRAS, MARCH 1911. சென்னை, மார்ச்மீ 1911.	NO. 8, பகுதி ௮.

காலம்

காலமென்பது பொழுது, சமயம், பருவம் எனப்பொருள்படுவது. நீண்டநாளைக் காலம் என்றும், ஒரு கணமோ அல்லது அரைக்கணமோ அல்லது குறித்த நேரமெதுவோ அதைச் சமயமென்றும், பலநாட்களின் பகுதிக்குப் பருவமென்றும் சொல்லுகிறோம். மொத்தத்தில் எல்லாம் காலமென்பதேயாம்.

காலமென்பது மானிடர்களுக்கு ஒரு பொக்கிஷம் போல் ஆவது. இந்தப் பொக்கிஷம் நம்மையறியாமலே செலவாய்வருகிறது. நாம் செலவிடாமல் நிறுத்தி வைக்கவும்முடியாது. செல்வம் செலவழிக்கப்படுமாயின் மீண்டும் அச்செல்வத்தைப் பெறுதல் கூடுமல்லவா? காலம் அப்படியல்ல. சென்ற காலம் சென்றதே. ஆனல் ஒரு விதத்தில் செல்வத்திற்கும் இதற்கும் ஒத்துமையுண்டு. என்னவெனில், செல்வம் நல்லமார்க்கத்திலும், தீயமார்க்கத்திலும் செலவிடப்படுவதுபோல் காலத்தை நல்வழியிலும் தீயவழியிலும் உபயோகித்தல் கூடும். செல்வத்தைத் தீயவழியில் செலவிடுவதால், மனிதன் துன்புறுவது திண்ணமென்பதை நாம் ஒவ்வொருவரும் அறிவோம். அதுபோல் காலத்தை வீணேசெலவிடுவதாலும் தீங்குண்டாம். நல்வழியிலாயின் செல்வஞ் சிறப்புங் கௌரவமும் இகத்தில் கொடுப்பதன்றிப் பரத்திலும் பேரின்ப

மளிக்கும். அது போலவே காலமும் கூட்டுவிக்கும். ஆயினும் செல்வத்தைவிடக் காலத்தைச் செலவழிப்பதில் ஆழ்ந்த கவனம் வேண்டும். செலவழிந்த செல்வத்தை மீண்டும் பெறுதல் கூடுமா தலால் அதைப்பற்றி அசட்டையாயிருக்கிறோம். அப்படிக்காலத்தைக்கருதக்கூடாது. இதனை மீண்டும் பெறுதல் முடியாதல்லவா?

அநேகர் காலமின்ன தென்பதையாவது அது செல்வது இப்படி யென்றாவது அதை இன்ன விதத்தில் செலவிடவேண்டு மென்பதையாவது உணராதிருக்கிறார்கள். நம் நாட்டுப் பெண்களிற் பெரும்பாலாரும் ஆடவரிற் சிலரும் பொழுது போகவில்லையே யென்று வருந்துகிறார்கள். சிலர் வம்பிலும் தும்பிலும் செலவிடுகிறார்கள். அந்தோ! இவர்களுடைய மதிக்கென் செய்வோம்! கழிந்த நேற்றைப்பொழுதை இன்றே அல்லது மற்றென்றே அடையக் கூடுமாயின் செல்வத்தைக்கருதுவது போல் காலத்தையும் கருதலாம். அப்படியில்லையே! இதனை நினைத்துப்பார்த்தால் வீண்காலம் போக்க மனந்துணிவார்களா? ஆகவே காலத்தைத் திரவியத்தினும் மேலாகக் கருதி வாழ்நாளின் முன்னேற்றத்திற்கு ஏற்றவாறு செலவிடவேண்டும்.

ஒரு மனிதனுடைய காலம் இளமை, வாலிபம், வயோதிகம் என மூன்றுவகையாகச் சொல்லப்படுகிறது. இளமைப் பருவத்தில் மனம் வேறொன்றிலும் பற்றின்றி நிர்மலமாகவிருக்குமாகையால், அது எதில் பழக்கப்படுகிறதோ அவ்வழியே நின்று இன்ப துன்பங்களை யளிக்கும். மானிடர்களுக்கு இகபர இன்பங்களை யளிப்பது யாதெனில் கல்வியொன்றேயாகும். கல்வியின் பெருமை அளவிடப்படாதது.

"மன்னனு மாசறக்கற்றோனும் சீர்தூக்கின்
மன்னனிற் கற்றோன் சிறப்புடையன், - மன்னனுக்குத்
தன்தேசமல்லாற் சிறப்பில்லைக் கற்றோர்க்குச்
சென்றவிடமெல்லாஞ் சிறப்பு"

என்பதாலும்

அறம்பொருளின்பம் வீடும் பயக்கும்
புறங்கடை நல்லிசையு நாட்டும்
உறுங்கவலொன் றுற்றுழியுங் கைக்கொடுக்கும்
கல்வியினூங்கில்லைச் சிற்றுயிர்க் குற்ற துணை.

என்பதாலுமறிக. பிரத்தியட்சத்திலும் கல்விமான்களுக்கு உலகத்திலிருக்கும் கௌரவம் யாவரும்அறிந்தவிஷயம். இந்தக் கல்வியையடைய மனம் நிர்மலமாக நிற்குங்காலமாகிய இளம் பருவத்தையே தெரிந்தெடுத்திருக்கிறார்கள். ஒளவைப்பிராட்டியார் "இளமையிற்கல்" என்றுபோதிப்பதையுமறிக. ஆகவே காலத்தில் இளமையே வெகு சிலாக்கியமானது. இந்த இளம் பருவத்தைப் பலவாறாகக் கழிக்கிறார்கள் அநேகர். இப்படிக்கழிக்கும் அவர்கள் பிற்காலத்தில் அதாவது வாலிபப்பருவத்திலும் வயோதிகப் பருவத்திலும் தாங்கள் இளமைப்பருவத்தை வீணேகழித்ததைநினைத்து நினைத்து வருந்துகிறார்கள். இது ஒவ்வொருவருக்கும் அனுபவசித்தமாகும்.

இரண்டாவதாகிய வாலிபப்பருவம் இளமையில் எவ்வழி அஸ்திவாரமாக நாட்டப்பட்டதோ அவ்வழி பற்றி நடத்தப்படுவது. இளம்பருவங் கெட்டவழியிற் பழக்கப்படுமாயின் அதை மாற்றுவது எளிதான காரியமல்ல. அது பற்றியே இளமையில் தாய் தந்தையர் உபாத்தியாயர் இவர்களுக்கு அடங்கி நல்வழியில் நடக்கவேண்டுமென்பது. வாலிபத்தில் மனை மக்கள் இவர்களுக்குத்தேடியிடல், பொருளையீட்டும் அவாவினிற்றல் முதலியவைகளில் உழலவேண்டியதாயிருக்கிறது. இப்பொழுது மானிடர்க்கு இன்றியமையாததான கல்வியைப்பெறுதல் சிறிதுங்கூடாமையாகும், ஏனெனில் அவகாசமிராது. தவிர அவகாசமிருப்பினும் கற்கப்படுவது மனதில் நில்லாது. ஆகவே முப்பற்சிபயன்றறுது இளமையில்வீண்காலம் போக்கினவர்கள் இக்காலத்தில் மிகக் கஷ்டப்படுவார்கள். கஷ்டத்தினிமித்தம் பாவபுண்ணியங்களையும் மான அவமானத்தையும் கருதாமல் ஈனத்தொழிலில் பிரவேசித்து இகபரசுகங்

களை யிழக்கிறார்கள். வாலிபத்தையும் வீணே செலவிடுவானாயின் மிகுந்த துன்பத்திற் காளாவானென்பது திண்ணம். காலத்தை வீணாக்காமல் இகபரசாதகமான முயற்சியில் செல்லவிடுதல் புத்திமானுக்கழகு. அப்படிப்பகுத்தறிவைக் கொண்டு இதுசெய்யத் தகுவன இதுதகாதன என்பனவற்றைக்கருதிக் காலத்தையுபயோகிப்பவர்களே உலகத்தில் மேன்மையடைந்திருக்கிறார்கள்.

மூன்றாவதாகிய வயோதிகப்பருவமோவெனில் சரீரந்தளர்ந்தல் பலங்குன்றல் மயிர்நரைத்தல்ரூபமாறுதல் முதலியவைகளை அறிகுறியாகக் கொண்டு பிறப்பது. இதில் தாங்கள் இளமை வாலிபம் இப்பருவங்களை வீணேகழித்தமூடர்களுக்கு எட்டுணையும் சுகமிராது. அப்பருவங்களைத் தங்கள் வாழ்நாளில் சுகத்தைக்குறித்து சரியாய் நல்வழியிற் செலவிட்டிருப்பவனே இந்த வயோதிகப் பருவத்திலும் சுகமுறுவான். இப்பருவத்தில எந்தவித முயற்சியும் செய்யமுடியாது எனினும் இதைச் சிலர் சீட்டாடுவதிலும் வம்பு பேசுவதிலும் செலவிடுகிறார்கள்: இது முற்றும் பிசகு. இக்காலத்தை பகவத்கதாசிரவணஞ் செய்தல், ஈசுவரரைப் பிராத்தித்தல், புண்ணியகருமங்களை யியற்றல் முதலியவைகளிற் கழித்து நற்கதிபெற முயலவேண்டும்.

காலத்தின் அருமை இத்தன்மையாதாலால், எவரும் காலத்தைவீணே கழிக்கலாகாது. இப்பொழுது இக்கலியுகத்தில் மானிடர்கள் எழுபது வயதிருப்பதும் அரிதாயிருக்கிறது. எழுபது வயது உடையவனேயே பூர்ணாயுள் பெற்றவனென்று கூறவேண்டியதாயிருக்கிறது. எழுபது வயதிலும், பாதி தூக்கத்திலும் பாதி நோய் முதலியவற்றிலும் கழிந்து எஞ்சிநிற்பது சொற்பகாலமே யாகும். இதையும் வீணாக்கிவிடின் என்பயன்? ஆகையால் காலத்தைத் திரவியத்தினும் மேலாகக்கருதி இகபரசுகம் பெறும் மார்க்கத்தில் செலவிடுதலே நன்மை பயக்குமெனவறிக.

புத்தகங்கள்

மனவுற்சாகம், நற்குணம், பெருந்தன்மை, இயற்கைப் பொருளைக் கண்டு ஆனந்திக்கும் திறமை முதலிய நன்மைகளை கல்வி நமக்கு அளிக்கின்றதல்லவா? எண்ணுமெழுத்தும் கண்ணெனத் தகு"மல்லவா?

"கண்ணுடையர் என்பவர் கற்றோர்; முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லாதவர்" என்ற திருவள்ளுவர்

வாக்கியத்தை நாம் நன்கறிவோமன்றோ?

கல்விச்செல்வம் இச்சிறப்புப் பெற்றதாயின் அச்செல்வமடங்கிய புத்தகங்களை எவ்வளவு சிறப்பித்துக் கூறவேண்டும். மேலும் கல்விச் செல்வம் பணச்செல்வத்தைவிட சிறப்புடைத்தது. ஏனெனில் பணச்செல்வம் குன்றத்தக்கது. கல்வியோ "கேடில் விழுச் செல்வம்."

ஆகவே புத்தகங்களை நாம் பாதுகாப்பது அவசியமாகும் எப்படிப் பணப்பெட்டிகளை நாம் திருடர் முதலிய பகைவர்களிடம் அகப்படாதபடி பாதுகாக்கின்றோமோ அப்படியே புத்தகங்களையும் நாம் அதிஜாக்ரதையோடு பாதுகாத்தல் வேண்டும்.

புத்தகங்களோ நம்மைக் கண்டிக்காமலும், நயமொழிகளினும் வற்புறுத்தும் உபாத்தியாயர்கள். நமக்குத் துக்கம் நேரிடும்பொழுது தேறுதலைத் தந்தும், கர்வத்தினால் நமது தலை துள்ளும்பொழுது நம்மை அடக்கியும், கடவுளின் பெருமைகளை நமக்கு வற்புறுத்தியும் நமது கடமைகளை நமக்கறிவுறுத்தியும் வருவதினால் அவைகளே நமது சிறந்த தோழர்கள். அவைகளே நமது ஆபத்திற் கேற்ற துணைவர்கள். உலக வாழ்க்கையின் ஆனந்தத்திற்கும் அவைகள் ஒருவாறு காரணம்.

நமது வாழ்நாள் சில. நாம் வீணாகக் கழித்த நாட்கள் திரும்பி வாரா. கல்வியாகிய தேசமானது நமக்கு எப்பொழுதும் எட்டுதலாகவே யிருக்கிறது. நாம் அதை அடைந்து விட்டால் நமது குற்றத்தாலன்றி அதைவிட்டு நாம் திரும்பி வரவுமாட்டோம். அதிலுள்ளோரை நாம் நேசித்தாலன்றி அவர்கள் நம்மை நேசியார் அவர்களை பரிதானம் கொடுத்து நாம்கைவசப்படுத்த முடியாது. தந்திரத்தினால் வெல்ல முடியாது. பெயரினால் பயமுறுத்த முடியாது. அவர்களை நாம் மனப்பூர்வமாய் சிரமப்பட்டு அடையவேண்டும்.

எப்படி நாம் ஒருவரைத் தோழராகக்கொள்வதற்குமுன் அவரின் குணாதிசயங்களை அறிதலவசியமோ, அப்படியே புத்தகத்தை நாம்படிக்கத் தொடங்குமுன் அப்புத்தகத்தின் நன்மை தீமைகளை ஆராய்வதவசியம். ஆகவே கற்றோர்களினுதவியால் தீயபுத்தகங்களை விலக்கி நற்புத்தகங்களைக் கற்கவேண்டும்.

பன்னாட்களுக்குமுன் நடந்த விஷயங்களை நாம் புத்தக மூலமாக அறிகிறோம். சிறிது நேரத்தில் பல நூற்றாண்டுகளின் விஷயங்களை அறிவதற்கு எதுவாயிருக்கின்ற புத்தகங்களின் சக்தியே சக்தி. அன்னிய தேயங்களின் சரித்திரங்களையும் அத்தேயத்தோர்களின் நடை உடை பாவனைகளையும், அததேயங்கள சிறப்புப்பெற்றதாயின் அசசிறப்பின் காரணத்தையும் புததகத்தில எழுதியிருக்கிற சரித்திரமூலமாக அறிகிறோம். பிறதேயங்களின் சரித்திரம் ஆராய்ச்சி அத்தியாவசியமானதென்று யாவருக்கும் தெரிந்த விஷயமே. நாகரிகம் முதலியவைகளில் தாழ்ந்திருக்கிற தேயத்தாகள் உன்னதஸ்திதியிலிருக்கிற தேயங்களின் சரித்திரங்களினால் நன்மை அடைவார்கள் என்பதறகு ஐயமுண்டோ? பெரியோர்கள் எழுதிய புததகத்தைப் படிப்பதால அவர்களின் அபிப்பிராயம் நமக்குத் தெரிகிறது. ஆகவே நாம் அவர்களோடு சம்பாஷித்தவர்களாகிறோம். மேலும் புத்தகங்கள் நமக்கு உலகஞானத்தைக் கொடுக்கிறது. உலகவிஷயங்களுக்குக் காரணங்கள் தெரியவருகின்றன

MADRAS.

ஆகவே புத்தகங்கள் நமக்கு அளவற்ற நன்மைகளை அளிக்கின்றன என்பதற்கு ஐயமில்லை. நற்புத்தகங்களை பெரியோர்களின் மூலமாய் தெரிந்து கொண்டு பயனற்ற புத்தகங்களை விலக்கி விடவேண்டும். அப்புத்தகங்களை நாம் படித்தால் நமக்கு கல்வித் திறமையைத் தருமென்பதற்கு ஐயமில்லை. தற்காலத்திலோ புத்தகங்களை வெகு சுலபமாகவும் மிகக்குறைந்த விலைக்கும் வாங்கலாம்: இது அச்சு யந்திரத்தின் பாக்கியம். பத்திரிகைகளையும் புத்தகங்களாகக் கொள்ளல் வேண்டும். ஏனென்றால் அவைகள் பல விஷயங்களைப் பற்றித் தெரிவிக்கின்றன.

R. S.

"WHO IS A TRUE GENTLEMAN?"

"உண்மைக் குலமகன் யாவன்"

உண்மைக்குலமகன் யாவன்? ஹம்சதூளிகாமஞ்ச சயனத்திலும், கேளீவிலாசத்திலும், இந்திரபோகம. பஞ்சபக்ஷிய பரமான்னத்திலும் மூழ்கா நின்று தெய்வசிந்தனையற்று கவலையின்றிக் காலங் கழிக்கும் மானிடப்பதரா குலமகன்? சிறியாரினஞ் சேர்ந்து அவர் தம் குணம் கொண்டு கவருடல், கள்ளுண்டல், பொய்மொழி பகர்தல் முதலாய தீயவழிகளிலேயே நடப்பவனு உண்மைக்குல? மகன்? சாண்வயிற்றின் கொடுமையினிமித்தமாய்த் தனக்காவது அல்லது தன்னைச் சேர்ந்தவர்களுக்காவது நன்மை பெருமைகளைத் தேடி குதூகலித்து வாணாளைக் கழிப்பவனு உண்மைக் குலமகன். ஒரு புறம் பற்றியிர்த்து நல்வழிகாட்டும் மனச்சாட்சிக்கு விரோதமாகத் தனக்குச்சுபாவமான காமக்குரோத, லோப, மதமாச்சரிய முதலாய பேய்கள் திப்பிரமை கொண்டு வசப்பட்டு, திகைதப்பி

யலையா நிற்பவனா உண்மைக் குலமகன்? ஆடவர் பெண்பாலர், இளைஞர் முதலியோரையும் மற்றுமுள்ள ஜீவராசிகளையும் தயை தாக்ஷண்யமின்றி, மரியாதை குன்றித் திட்டியதட்டி, தலை கொய்து, நசுக்கிப் பொசுக்கி அட்டகாசம் செய்பவனா உண்மைக்குலமகன்?

ஓர் குலமகன் செல்வவானா யிருக்கவேண்டிய தவசியமில்லை ஓர் குலமகன் உயர்ந்த மதத்தோனாயிருக்க வேண்டியதில்லை. பெரியோரினஞ் சேர்ந்து அவர்களை பண்டித் தொண்டு செய்து வந்து கற்பனவற்றை ஐயந்திரிபறக் கற்றறிந்து அகம்பாவம் சுய நயம் பாராட்டல் முதலிய தீக்குணங்களை நீக்கிப் பொதுஜன நன்மைக்காகப் பாடுபடுபவனே உண்மைக்குலமகன்.

காலவரிசைக் கிரமத்தில் உயர்ந்தோன் தாழ்வதும். தாழ்ந் தோனுயர்வதும் சகஜமே. சகடக்கால்போல் வருவன இவ்வுலகத்து செல்வங்களும் இன்பங்களும். ஆயுங்கால் உண்மைக்குலமகனானவன் கஞ்சித்தும் பக்ஷபாத மின்றி சகோதர சகோதரி பாவத்துவத் துடன் தெய்வத்திற்கு அஞ்சி, தீயசிந்தனைகளைத் தீயசெயல்களையு மகற்றி, பேரின்பருநுகர்ச்சியைக் குறித்துக் கவலையுற்று, திரிகரண பரிசுத்தியோடு சன்மார்க்க வழியில் காலங்கழிப்பவனேயாம். உயர் குலத்தோர் தமது குலத்திற் கமைந்த குணங்களை மேற் கொண் டொழுகாராயின், அவர்கள் கீழ் குலத்தோரே யாவர். தாழ்ந்த குலத்தோர் உயர்குலத்தோருடைய நல்லொழுக்கங்களைக் கடைப் பிடித்து வந்தால், அவர்கள் உயர் குலத்தினுதித்தவராவர் என்ற னும் ஏற்றத்தாழ்வின் காரணம் தத்தம் வருணாசிரமங்களின்படி நடப்பதினாலேயாம் 'நான்' என்பதையும் அதைச்சார்ந்த அகப் பற்றுகளையும் விலக்க வேண்டும். புறப்பற்றுகளில் விலக்க வேண்டி வனவற்றை விலக்கி யொழிக்க வேண்டும். பணம் படைத்தவர்க ளனைவரும் நற்குணசாலிகளென்று துணியப் போமா! பணமி ருந்தும் குணமின்றேல் ஒன்றுமில்லையாகும். நற்குணமிருந்துழி நறுமணங் கமழும். சில மானிடர்கள் தமது பணத்தையும் செல்வங்

களையும் சுவாமிகளாகப் பாவித்து பூஜித்து பாதுகாத்து வருகிறார்கள். நாமும் நமக்குள்ள செல்வங்களும் மற்றப் பிரகிருதியின் சிருஷ்டிகளனைத்தும் ஒப்பற்ற கருணாகரக் கடவுளினதென்கிற தேற்ற உணர்ச்சியை அறியப் பெறாத முறியர்போலும்!

அத்தகைய மா டர்கள் அவர்களது மனமொழி மெய்களையும் செல்வங்களையும் நல்வழியிலேயே பொதுஜன நன்மைக்காக உதவாவிட்டால், எப்படி உண்மைக் கனவான்கள் என்கிற மாட்சிமை பெறுவார்கள்? அன்றியும் 'சாதியிரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால் மேதினியில்' என்றபடி ஆண் பெண் என்கிற இரண்டு ஜாதிகளேயிருக்க இப்புவியில் பல வேறு ஜாதிகளைக் கொண்டு உயர்ந்த குல ஜாதிதானே உத்தமகுல மகனென்று சொல்லப் போமோ? ஈனஜாதியானது நன்னடக்கைகளினாலே உயர்ந்த குல மகனாவன், ஆன்ம ஞானவழியின் ஒழுக்கமே ஆக்கத்தைப் பெறுவதற்கோர் நேரிய வழியாம்.

ஆகையால் படாடோபம், அடுத்துக் கெடுத்தல், நயவஞ்சகம் பிறர்மனை பொருள்நேசம், முதலிய தீக்குணங்களாகிய பைசாசங்களை மனதினின்றும் இருதயத்தினின்றும் களைந்துவிட்டு, சகோதர சகோதரி பாவத்துவம், பூததயை, நன்றிமறவாமை, விச்வாசம் முதலிய நற்குணங்களாகிய தேவர்களினுதவியால் தூயோராய் சாயுஜ்ய பதவியையடைய முயல்வோமாக.

C. S. Duraiswmai

யாத்திரையும் அதன் பயனும்.

மானிடவறிவு இயற்கை செயற்கை என்று இருவகைப்படும். மக்களது முயற்சியால் தேடிக்கொள்ளக்கூடியதாகிய செயற்கை

யறிவு பலவற்றாற்பெறலாகும். முதலாவது ஆசிரியரிடத்தும் தாமாகவும் கற்கும் கல்வியால் வருவது. இரண்டாவது பண்பினர் பலரோடும் பழகி நேர்ந்தவழி நல்லவிஷயங்களைக் கேட்டுத்தெரிந்து கொள்வதாய் கேள்வி யெனப்படுவது. எத்துணைக் கல்வியிருப்பினும் உலகஞான மிலாக்கல்வி நேத்திரமிலா முகத்தையொக்குமாதலின் கல்வியுடன் கேள்வியும் வசியகமென்பது தெளிவு. அவ்வாறே சிறந்த அறிவு பெறவேண்டின் அனுபவமும் இன்றியமையாததாகும். அனுபவமாவது தாமே பிரத்திபட்சப் பிரமாணமாய் விஷயங்களையுணர்வது. ஒருகாரணமாக, சமுத்திரத்தை யொருநாளும் கண்டறியாத ஒருவனுக்கு, அதனை இன்னவாணிருக்குமென்றுஎடுத்துரைத்ததனால் மட்டும் புலப்பட்டு விடுமா? அன்று, நேரில் கண்டால்தான் தெரியும். இத்தகைய வனுபவவறிவு பெறவேண்டின், யாத்திரை யொருபெருஞ் சாதனமாகும். அதுபற்றியேஇங்கிலாந்திலும் வேறுசில விடங்களிலும் பெரியவுத்தியோகங்களுக்காகத் தெரிந்தெடுக்கப்படும் யௌவன புருஷர்களை யிரண்டொருவருஷ காலம் தேசசஞ்சாரத்திற் கழிக்கவேண்டுமென்று நிபந்தனைசெய்திருக்கிறார்கள்.

பலவிடங்களுக்கு யாத்திரைபோய்வருவதனால் ஆங்காங்குள்ள ஜனங்களது ஆசாரவழக்கவொழுக்கங்களும் நடையுடை பாவனைகளும், மதசமயக்கொள்கைகளும் கல்வி செல்வநாகரீகங்களாலுற்ற சிறப்புகளும் உற்று நோக்க சமயம்வாய்க்கப்பெற்று அவற்றுள்ளுந் தம்நாட்டில் வழங்கிவருவனவற்றுமுள்ள வொற்றுமைவேற்றுமைகளைக் கவனித்து மேலானதைக்கொண்டு இழிந்ததை யொழிப்பதே நாம் பெறும் பெரும்பயன்.

யாத்திரை சுவதேச யாத்திரைப் பரதேச யாத்திரை யெனவிருவகைப் படுத்தலாம். தமது தேசத்திற் குள்ளேயே சஞ்சாரம் செய்து வருவதனால் ஒரு குடையின் கீழ்வாழு முயிர்க்கு ளொருவருக் கொருவர் அன்னியோன்னிய வன்பும் ஐக்கியமும் விருத்தியாகும். ஒவ்வொருவரும் தம் இராப் நாட்டிலுள்ள பிரஜைகளின்

நலத்தை யுடன்பிறந்தார்போல் நாட வேண்டலின், அன்னாது குணதிசயங்களையும் அன்னியற் போலல்லாது நன்கறிதல் வேண்டும்.

"திரைகடலோடியும் திரவியம் தேடு" என்றபடி பொருள் தேடுதற் பொருட்டும் அன்னிய தேசயாத்திரை பயன் படும். மற்றும், சிறந்த வித்துவ சபைகளிற் சென்று, கல்விகற்கவுங் கைத்தொழில் முதலிய வியாபார வகைகளை யறிந்து கொள்வதற் கும் அன்னிய தேசயாத்திரை செய்யலாகும். பெரும் பிரயாணிக ளாய்ப் பல விடங்கள் சென்று தாம் கண்டவற்றைச் சிலர் செவ்வை யாக எழுதியருளியிருப்பது பிற்காலத்தில் வந்த சரித்திரவாசிரி யர்களுக்குப் பேருதவி புரிந்திருக்கின்றது. அன்னவர்களுளொருவ ராகிய ஐயூன் த்ஸாங் என்றவரை இந்து தேசச் சரித்திர மாணவர் கள் நன்கறிவார்.

மேல் நாட்டுப் பெரும் பிரயாணிகள் பலரது ஊக்கத்தாலேயே இப்பொழுது வழங்கி வரும் பூகோளசாத்திரம் தழைத்திருக் கிறது. பல தேசங்களிலுமுள்ள மலைச்சாரல்களையும் உயரமளவிற் கரிய பனிசூழ்ச்சிகளையும், கொடிய மிருகங்கள் வாழுங் காடுகளை யும், சிற்றாறுகளும் பெருநதிகளும்தோன்று மிடங்களையும், பாழும் மைதானங் களையும் கடலுடன் கலக்கும் சங்கத் துறைகளையும் நிர்மானுஷ்யமான தீபாந்தரங்களையுஞ் சென்றடைந்து முக்கியமான விஷயங்களை கவனித்துக்கொண்டு உலகத்தா ரெல்லோருக்கும் பயன்படுமாறு வெளியிட்டிருக்கும் கனவான்கள் பலராவர்.

இவ்வகன்பூமியின்கண் தரைப்பிரதேசத்துள் ஒருபாதி விஸ் தீரணமுடைய அமரிக்காகண்டத்தை முதன்முதற் கண்டுபிடித்து உலகத்திற்கு வெளியிட்டவர் யாத்திரையிற் பேரவாக்கொண்ட கொலம்பஸ் என்றவோர் மானுமியென்பதை யாவருமறிவார்.

யாத்திரையின் சிறப்பிவ்வாறாக, ஒவ்வொருவரும் தாம்பிறந்த வூரிலேயே கிணற்றுத் தவளைகளாய்க் காலங்கழியாது நேர்ந்தவழி

வேவ்வேறிடங்கள் சென்று தமதறிவினை விசாலப்படுத்திக் கொள் வாராக.

சேய்.

குடும்பமும், அதன் பாதுகாப்பும்.

ஐயா புத்திமான்களே! முற்கால அரசர்களும், வித்வான்களும் மஹாரிஷிகளும் தங்கள் தங்கள் பத்தினிகளை எவ்வளவோ கௌரவமாக நடத்தினார்களென்றும், அவர்களுடைய வேண்டுகோளைத் திருப்திசெய்யாமல் ஒருக்காலும் இருந்ததில்லையென்றும் ராமாயணம், பாரதம், பாகவதம், நைஷதம் முதலான உத்தமநூல்களால் தெரியவருகிறதன்றி தேவர்களும் தங்கள் ஸ்திரீகளைக் கீழே விட மனமில்லாதவர்களாய் தங்கள் தங்கள் தேகங்களிலேயே வைத்துக்கொண்டதாகவும் புராணங்களில் சொல்லப்பட்டிருப்பதை நாம் அறியாமலிருக்கவில்லை. அதாவது ஸ்ரீ பரமசிவன் தனது தேவியாகிய பார்வதியை இடதுபாகத்திலும், மகாவிஷ்ணுவானவர் தமது பத்தினியாகிய ஸ்ரீதேவியை மார்பிலும், பிரம்மதேவன் ஸரஸ்வதி தேவியை நாவிலும், இந்திரன் தன்மனைவியாளைத் தொடையிலும் வைத்துக்கொண்டிருப்பதாக புராணங்களில் கூறப்பட்டிருப்பதல்லவா? தேவர்களே இவ்வளவு கௌரவமாக அன்புடன் நடத்தும்பொழுது நாம்மாத்திரம் நமதுமனவிமார்களை அடிமையிலும் கடைப்படக்கடிந்து நடத்திவருவது அளவிடப்படாத பெண் துரோகமேயாம்.

நாம்கலியாணம் செய்துகொள்ளும் வரைதாய் தமக்கை முதலானவர்கையிலிருந்து வளருகிறதும் தவிர "தாய்க்குப்பின்தாரம்,"

என்றுசொல்லும் பழமொழிக்கிணங்க, விவாஹமானபின் பத்தினிகளால் சகலஸம்ரக்ஷணையும் அடைகிறோமல்லவா? திரவியமும் கீர்த்தியும் சம்பாதிப்பதில் நாம் நம்முடைய எண்ணமெல்லாம் செலுத்துகிறோம். நமதுதாய், தமக்கை, பத்தினி முதலானவர்களின் எண்ணமென்றாலோ நமக்குவேண்டிய சுகத்தையும், பிரியத்தையும் தேடுவதில் அவர்களுடைய நினைவையெல்லாம் வைக்கிறார்கள். நாம் அவர்களுடைய க்ஷேமத்தைக் கருதுவது மிகவும் அரிது; அவர்கள்நம்முடைய க்ஷேமத்தை நினையாதநேரமில்லை, அவர்களுடைய பேச்செல்லாம் நம்முடைய நினைவே; அவர்கள்செய்யும் தேவாராதனை யெல்லாம் நம்முடைய சுகத்தைக்கருதியே; நிற்க.

நாம் நம்முடைய ஊரையும், வீட்டையும், விட்டுச் சிறிது நாள் வெளியில் போவதாயிருந்தால் வேண்டிய ஸாமக்ரிகளுடன் பிரயாசப்பட்டாலும், எவ்வளவோ மனஸ்தாபமும், துன்பமும், அடைகிறோம். அப்படியிருக்க நம்முடைய பத்திநிகள் ஊரையும், வீட்டையும், தாய், தந்தை, தங்கை, தமக்கை, அண்ணன், தம்பி மற்றுமுள்ள பந்துக்கள்யாவரையும் விட்டுவிட்டு நம்மை நம்பிவருகிறபடியால் அவர்களை மிகவும் பிரீதியாயும், அவர்களுக்கு யாதொரு குறைவும் அணுகவொட்டாமல் காப்பாற்ற வேண்டியது நமக்கு மிகவும் கட்டாயமான கடமையல்லவா? பெண்களுக்கு இயற்கையாயுள்ள மாதவிடாய், கர்ப்பம், பிரஸவம், பிள்ளைவளர்த்தல், சமயல்செய்தல், புருஷன், மாமன், மாமி முதலியோரை உபசரித்தல், விருந்தினரை உபசரித்தல், முதலாகிய காரியங்களின் சிரமத்தையும், துன்பத்தையும் சற்று நினைத்தால் மண்ணும் இரங்கும், மலையுங் கரையுமே.

ஆரம்பக்கல்வி (Elemeniay Educafauin)

மக்களின் வாழ்நாட்குக் கல்வியினும் சிறந்த உதவி தரத்தக்கது வேறொன்றுமில்லை. எவ்வகைத் துன்பத்திற்கும் துணையாக நிற்

பதுகல்வியே. இஃதில்லாமானிடர்கள் இருந்தும் இல்லாதாரே. உலகவாழ்விற்குக் கல்வி அத்தியா வசியமானது. கல்வியில்லாச் செல்வம் பதருக்கு ஒப்பாகும்.

“மன்னனு மாசறக்கற்றோனும் சீர்தூக்கின்
மன்னனிற்கற்றோன் சிறப்புடையன் — மன்னனுக்குத்
தன்றேசமல்லாற் சிறப்பில்லை கற்றோற்குச்
சென்றவிடமெல்லாஞ்சிறப்பு” என்றார்

இச்செய்யுளினால் கல்வியின்மேன்மை

புலவர். நன்குவிளங்கும். மிருகங்களுக்கும் மனிதர்களுக்கும் அறிவே முக்கிய வித்தியாசம். ஆகையினால் கல்லான் மிருகத்திற்கு ஒப்பாவான். எப்படி உணவை உட்கொள்வதினால் தேகம் வளர்கிறதோ அப்படியே கற்பதினால் புத்திகூர்மை அதிகரிக்கிறது.

“கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே”

மேற்கூறிய கல்வியின் சிறப்புகளை ஒவ்வொருவனும் நன்குணர்ந்து கல்வியை இடையறா முயற்சியோடு கற்றல்வேண்டும். உயர்ந்த கல்வியை உடையோனாயில்லாவிட்டாலும் சிற்றறிவு தரத்தக்க கல்வியையேனும் உடையோனாயிருத்தல் அவசியம். சிற்றறிவூட்டத்தக்க கல்வி ஆரம்பக்கல்வியாம். இவ்வாரம்பக் கல்வியையாகிலும் கற்காத ஆண்மக்களும் பெண்மக்களும் இவ்வுலகத்தில் சுகம்பெறுவது கூடாமையாம். அவர்கள் யாவராலும் இகழப்படுவார்கள்.

பட்டணங்களில் வித்தியாசாலைகளே கல்வியின் அபிவிருத்திக்கு ஹேதுவாயிருக்கின்றன. அவைகளில் ஏற்படுத்தப்பட்டிருக்கிற சம்பளத்திற்குத் தக்கபடி மாணாக்கர்களின் தொகுதி வித்தியாசாலைகளில் பரவியிருக்கும். இந்தியாவில் அநேகர் செலவிற்கேற்ற வருமானமின்றிக் கஷ்ட ஜீவனம் செய்கிறார்கள். பாவம்! அவர்களெப்படித் தங்கள் அருமை மக்களைப் படிக்க வைக்கமுடியும்? ஆக

வே சிறு வயதிலேயே சிலர் பிச்சையெடுத்தும் சிலர் கைத்தொழில் களைக் கற்றும் ஜீவனஞ்செய்து வருகிறார்கள். இக்காலத்தில் சம்பளம் அதிகரித்துக்கொண்டே வருகிறது. சிலர் தயாளர்களிடமிருந்து பணப்பிச்சையெடுத்து படிக்கிறார்கள். வேறு சிலர்பிச்சையெடுப்பது அவமானமென்று படியாமலிருக்கிறார்கள். மற்றும் சிலர் சிறிது படித்துவிட்டு இடையில் நிறுத்திவிடுகிறார்கள். இப்பாதிக்கல்வி. பெருந்துன்பத்தை விளைவிக்கும். ஆரம்பக்கல்வியின் எல்லையைப் பூர்த்தி செய்யாமையால் அவர்கள் படித்தும் பிரயோஜன மில்லாதவர்களாகிறார்கள். ஆரம்பக்கல்வியேனு மிருந்தால் விஷயங்கள் யாவற்றிலும் சிறிது புத்தியுண்டாகலாம். அதிலும் அரைப்படிப்பானாலோ ஒன்றும் தெரியாது.

வரவரப் படிப்பு பணமுள்ளவர்களுக்குத் தான் எட்டக்கூடியதாயிருக்கிறதேயன்றி, ஏழை ஜனங்களுக்கு எட்டக் கூடியதாயில்லை. ஆகவே ஆரம்பக் கல்வியைச் சம்பளமில்லாமல் படிக்கலாமென்று சட்டமேற்படுத்தி விட்டால், அதனால் பலர் நன்மைஅடைவார்கள். இக்காலத்தில் பரோடா (Baroda)வில் யாவரும் ஆரம்பக்கல்வியைப் படித்தல் அவசியமென்ற சட்டமிருக்கிறது. இதன் நன்மையை விரித்துரைப்பது அனாவசியம். ஏற்கனவே பத்திரிகைகளில் வந்திருக்கின்றன. ஆகவே கல்வியில் விருப்பமுள்ள யாவரும் இம்முக்கிய விஷயத்தைப்பற்றிக் கவனிக்கவேண்டிய தவசியந்தான். கவர்ன்மெண்டார் ஜனங்களுக்கு இந்நன்மையைச் செய்வார்களாகில் நம் நாடு நல்ல நிலைமைக்குவரும். இது வன்றிக் கட்குடியர்களும் மற்றும் சில துன்மார்க்கவழியில் பணத்தை செலவழிப்பவர்களும் அத்துஷ்டச் செய்கைகளை நிறுத்தி அப்பணத்தை நல்விஷயமான கல்வியின் அபிவிருத்திக்குச் செலவழித்தால், அதிக சிரேஷ்டமாயிருக்கும்.

ஆரம்பக்கல்வியை சுவேச்சையாய் ஆக்கிவிட்டால் அதற்கு இப்போது இருக்கிற மேன்மை குறைந்து விடுமென சிலர் நினைக்கிறார்கள். ஏனென்றால் அவ்வறிவீனர்கள் பணத்தை செலவழித்

தால் தான் தம்பிள்ளைகள் படித்தவர்களா கின்றார்களென்று நினைக்கிறார்கள். இது ஒரு பெரிய தப்பு அபிப்பிராயம். இரு வழியிலும் மாணுக்கர்களின் புத்திக்குத் தக்கவாறு தான் படிப்பு வரும்.

மேலும் இவ்வாரம்பக் கல்வியினால் இப்போதிருக்கப்பட்ட வித்தியாசாலைகளின் வரும்படி குறைந்து விடும். ஆகவே சில வித்தியாசாலைகளை எடுத்துவிட வேண்டியதாயிருக்கும். இவைகளினால் பாதகம் மொன்றுமில்லை. ஆனால் சுவேச்சைப் படிப்பின் நன்மைஇந்நஷ்டத்தை விட அதிகமாயிருப்பதாலும் சீர்திருத்தங்களை ஏற்படுத்தினால் ஒரு பகுதியார்க்கு நன்மையும் மற்றொரு பகுதியார்க்குத் தீமையும் உண்டாகுமாதலாலும் இத்தீமையை கவனித்தல்கூடாது.

ஆகவே தனவான்களும் மற்றத் தேசாபிமானிகளும் இவ்வாரம்பக் கல்வியின் மேன்மையையும் உபயோகத்தையும் அறிந்து தங்களால் இயன்றளவு பொருளுதவிசெய்து வித்தியாசாலைகள் ஏற்படுத்தி, அவைகளில் யாவரும் சம்பளமின்றிப் படிக்கலாமென்ற ஏற்பாட்டுக்குக் கொண்டுவந்து விட்டால், அநேகர் அவ்வித்தியாசாலைகளில் படித்து இக்கனவான்களின் பேருதவியினால் நன்மை அடைவார்கள் என்பதற்கு ஐயமில்லை.

R. SANKARAN,

விவேகாநந்த சுவாமிகள்.

"ஏகம் சத்விப்ரா பகுதாவதந்தி" என்னும் தத்துவத்தை உபநிஷத்துக்கள் மூலமாக, உலகத்தாரெல்லோரும் நல்லுலகமடைவதைக் கருதி வெளியிட்ட மஹரிஷிகள் எல்லோரும் திரண்டு இப்

போது இராமகிருஷ்ணபரமஹம்ஸராக அவதரித்தார்களோ வென்று நாம் எண்ணும்படி இருந்தார் இம்மகான். இப்பரமஹம்ஸர் பங்காளத்தில் குமார்பகூர் என்னும் கிராமத்தில் பிராமண குலத்தில் அவதரித்தார். இவர் இளமையிலேயே புராணங்களெல்லாங் கேட்டு, நிரம்பபக்திபடைந்து, தன்னுடைய வாழ்நாளில் புராணங்களிற் பக்தர்களைப் பற்றிச்சொல்லியவாறே நடந்துகொள்ளவேண்டுமென்று தீர்மானித்தார். இவர் பள்ளிக்கூடத்தில் வெகுநாள் படிக்கவில்லை. சிறுவயதிலேயே இவர் தந்தை இறந்தமையின், வாழ்நாட் கழித்தற்பொருட்டு தக்ஷிணேஸ்வர காளி கோயிலில் அர்ச்சகர்வேலையை ஒப்புக்கொண்டார். அந்த வேலையை நெடுநாட்களுக்கு அவர் வைத்துக்கொள்ளவில்லை. புராணம், இதிஹாசம், சாஸ்திர முதலியவைகளை இவர் கேட்டிருந்ததனால், அவரை அறியாது, கடவுளையே காணவேண்டுமென்னும் ஆசை அவருக்கு உண்டாயிற்று. தன் வாழ்நாள் முழுவதையும் அதன் பொருட்டே செலவழிப்பதாக நிச்சயம் செய்தார். ஆதலின், இவர் எப்பொழுதும் அவ்வெண்ணத்திலேயே மூழ்கியிருந்து, கோயில் பூஜை வேலையைக்கூடச் சரியாய்ச் செய்யாமலிருந்தார். ஜனங்களெல்லாம் அவரைப் பைத்தியமென்று அழைத்தார்கள். இனி, தன்னால் கோயில் வேலையொன்றுஞ் செய்யமுடியாதென்று தோற்றிவிடவே, அதை விட்டுவிட்டுப் பக்கத்திலிருந்ததோர் காட்டிற்குப் போய்ச் சேர்ந்துவிட்டார். அங்கே தன்னைப் பலவிதமான சிக்ஷைகளுக்குள் ஆட்படுத்திக்கொண்டு, பரமனையே யடையவேண்டுமென்று நிரம்ப உழைத்துக் கொண்டிருந்தார்

இவருக்கு இளவயதிலேயே கல்யாணமாயிற்று. இவர் உலகத்தாருக்கு ஒரு பெரிய உண்மையைக் கற்பிப்பதற்கே தனது விவாகத்தை உபயோகப்படுத்தினர். அவர் சந்நியாசம் வாங்கிக்கொள்வதற்கு மனைவியின் உத்திரவு கேட்கும்பொழுது, தன்னைப்போன்ற மனமுடையவளாக அவளும் இருப்பதைக்கண்டு நிரம்பவும் ஆச்சரியப்பட்டார். பின்னளில் அவருடைய சிஷ்யையாகவே அவரு

டன் கூடவிருந்தாள். இவர் ஒரு மதத்தையும் நிந்திப்பதில்லை. உலகத்திலுள்ள எல்லாமதங்களையும் அறிந்து, எல்லாவற்றிலும் பகவதம்சம் கொஞ்சம் கொஞ்ச மிருக்கிறதென்பதை யுணர்ந்து, அதை மற்றவர்க்கும் போதித்தார். இவர் ஒருவருடைய மனக்கொள்கையையும் மாற்ற முயலவில்லை. எம்மதத்தாராயினும், எவ்வருணத்தோராயினும் அவரது கொள்கையை விடாது கடைபிடித்தொழுகும்படி கற்பித்தார். இவரிடம் அசாத்தியம் என்ற வார்த்தையைச் சொல்லக்கூடாது. முடியாது என்று உலகத்தோர் நினைத்துவிட்ட காரியங்களையெல்லாம் திரணமாய் நினைத்துப் பேசுவார். இவர் அகங்கார மற்றவர். தான் பிராமணன் என்ற செருக்கு ஒரு தடவை இவருக்கு வரவே, அச்செருக்கைப் போக்கிக்கொள்ள வேண்டுமென்று தமது நீண்ட மயிரால் ஓர் பறையனுடைய குடிசையை விளக்கினர். இத்தகைய மஹானை யார்தாம் கொண்டாடார்? யார்தாம் இவரைக் குருவாகக் கொள்ளாதவர்?

கல்கத்தாவிலுள்ள ஒவ்வொரு புத்திமானும் இவரைக் குருவென்று சொல்லிக்கொள்வதிலேயே நிரம்ப பிரியமுடையவர்களாகவிருந்தார்கள். அவரிடமேயிருந்து அவருக்குப் பணிவிடை செய்துவந்த சிஷ்யர்களுள் முதன்மையானவர் விவேகானந்த ஸ்வாமிகள். இவர் கல்கத்தாவில் காயஸ்த வம்சத்தில் ஏறக்குறைய நாற்பது வருஷங்களுக்கு முன் அவதரித்தார். இவருக்கு நரேந்திரநாததத்தர் என்றுபெயர். சரியான வயதில் கல்விகற்க ஆரம்பித்து, கல்கத்தா ஜெனரல் அஸ்ஸம்ப்ளி காலேஜினின்றும் பி. ஏ. பரீக்ஷையிற்தேறினர். கல்விகற்றுக் கொண்டிருக்கும்பொழுதே, இவர் இராமகிருஷ்ணபரமஹம்சரையடைந்து அவரிடம் தத்துவங்களை யுணர்ந்து வந்தார். அவ்வளவு இளவயதிலேயே இவருக்கு அறிவு முதிர்ந்து விவாகத்தை வெறுத்து, துறவறம் பூண்டு ஆங்கிலத்திலும் ஸம்ஸ்கிருதத்திலும் இருக்கும் பல நூல்களைக் கற்று வந்தார். இவரது பெருமை சிறிது சிறிதாகப் பரவ ஆரம்பித்தது.

1893-ம் வருஷத்தில் அமெரிக்கா ஐக்கியமாகாணங்களிலுள்ள சிகாகோ என்னும் நகரத்தில் மதப்ரதிநிதிசபை கூடிற்று. அப்பொ

முது இவர் இந்துமதப்பிரதிநிதிகளுள் ஒருவராக அமெரிக்காவுக்கு அனுப்பப்பட்டார். அப்பொழுது மூன்று பிரசங்கங்கள் செய்தார். அப்பிரசங்கங்களைக் கேட்ட எல்லோரும் வியந்தார்கள். "இந்து மதம்" என்னும் பெரிய ஒரு வியாசத்தை வாசித்தார். அங்கே பல மதங்களுக்குப் பிரதிநிதிகளாக வந்திருப்பவர்களை நோக்கி அவரவர்கள் தத்தம் மதந்தான் உயரியது என்று கூறுவது சரியன்றென்பதை உதகரிக்கப் பின்வருமாறு ஒரு சிறிய கதையொன்று சொன்னார்.

ஒரு சிறு கிணற்றில் வெகு நாட்களாக ஒரு தவளை வசித்துக் கொண்டிருந்தது. ஒருநாட்பொழுது மற்றொரு தவளை அக்கிணற்றில் வந்து சேரவே, பழைய தவளை அதனை நோக்கி "நீ எங்கிருந்து வருகிறாய்?" என்று கேட்டது.

"நான் சமுத்திரத்திலிருந்து வருகிறேன்." என்று கூறிற்று.

"சமுத்திரம் இவ்வளவு பெரிதிருக்குமா?" என்று ஓடித் தாவிக் குதித்தது.

"இன்னும் பெரிதாயிருக்கும்."

இரண்டடி தாவிக் குதித்து "இவ்வளவு பெரிதிருக்குமா?" என்று கேட்டது.

"அதை அளவிடவே முடியாது" எனவே

"நீ பொய்சொல்லுகிறாய்" யென்றது.

இவ்வாறே ஒவ்வொருவரும் தானொரு மதத்திலிருந்து கொண்டு, பிறமதங்களெல்லாம் தம்மதத்தினும் தாழ்ந்ததென்று சொல்லுகிறார் என்றார். இக்கதையைக் கேட்ட எல்லோரும் கரகோஷம் செய்து ஆநந்தித்தார்கள்.

(வரும்)

பர்த்ருஹரி சரிதம்

மாளவ தேசத்தில் சகல வஸ்துக்களும் நிறைந்து சொர்க்கத்தையும் அவமானஞ் செய்யக் கூடியதாய் விளங்குவது உஜ்ஜயினி யென்னும் நகரம்.

இந்த உஜ்ஜயினி நகரத்தை சகல தேசபத்னிகளின் நெற்றிக் குங்குமங்கள் படிந்து சிவந்த பாதங்களையுடைய பர்த்ருஹரி அரசன் ராஜ்யபரிபாலனம் செய்து கொண்டு வந்தான். அவன் சகல கலைகளையு முணர்ந்தவன். சாத்திரங்களையு மோதியுணர்ந்தவன்.

இவ்வரசனுக்கு தன்னுடைய சத்ருக்களாகிய அரசாகளின் பாாக்ரமத்தைத் தன்னுடைய விக்ரமத்தினால் அபகரிக்கின்ற விக்ரமன் என்னும் ஓர் சகோதரன் இருந்தான். அதே நகரத்தில் சகல சாஸ்திர வித்பன்னனும் மந்திர சாஸ்திரங்களில் வல்லவனுமாகிய ஓர் பிராமணனிருந்தான். ஆனால் அவன் மிகவும் தரித்திரன். அவன் மந்திர சாஸ்திரப்படி புவனேசுவரியைப் யாராதித்து வந்தான். அந்த தேவதை அவனுடைய பூஜையால் மிகவும் சந்தோஷமடைந்து, "ஏ பிராம்மண! இந்தக்கனியைப்புசி. நீரா மரணமற்ற வனாவாய்" என்று கூறி ஓர் கனியைக்கொடுத்துவிட்டு அந்தர்த்தானமடைந்தது.

இந்த பிராமணன் அந்தப்பழத்தைப் பெற்றுக்கொண்டு தனது கிரகஞ்சென்று ஸ்நானம் செய்து, தேவாராதனை முடித்துக் கொண்டு அந்தக் கனியைப் புசிக்கக் கையிலெடுத்தான்.

இதற்குள் அவனுக்குப் பின் வருமாறு ஓர் ஆலோசனையுதித்தது. நானோ தரித்திரன். அப்படிப்பட்ட நான் கிழத்தனம் மா

ணம் இவைகளில்லாமல் வெகுகாலம் இந்த உலகத்தில் ஜீவித்திருந்து யாருக்கு என்ன உபகாரம் செய்யப்போகிறேன். நான் அநேக வருஷம் உயிருடனிருப்பினும் பிச்சை வாங்கியே ஜீவிக்க வேண்டும். பரோபகார சிந்தையுள்ள மனிதன் உலகத்தில் கொஞ்சக்காலம் உயிருடனிருப்பினும் நன்மையுண்டு. மேலும் ஞானம் பராக்ரமம் முதலிய குணங்களுடன் கூடிய ஒரு மனிதன் ஒரு கணப்பொழுது யிருடனிருப்பினும் பிரயோஜனமுண்டு. அன்றியும் எவன் பிழைத்திருந்தால் உலகத்திற்கு நன்மையுண்டோ அவன் வெகு நாளுயிருடனிருக்க வேண்டும். மற்றவன் ஜீவித்திருக்கின் கொக்கு தன் மூக்கினால் வயிறு வளர்ப்பதை போலாவான்.

(வரும்)

பணத்தாசை பொல்லாது.

மூன்று சிறுவர்கள் ஒன்று கூடித் தங்கள் சொந்த ஊரிலிருந்து அதற்கு இரண்டு காதவழி தூரத்திலிருந்த ஓர் ஊருக்குப் பிரயாணப் பட்டுப்போனார்கள். அக்காலம் ரயில் பாதையில்லாத காலமாதலால், கால் நடையாகவே சென்றார்கள். போய்க்கொண்டிருக்கையில் வழியில் ஒரு பெரிய பணப்பையைக் கண்டெடுத்தார்கள். அதை யவிழ்த்துப் பார்த்து, அதில் எல்லாம் தங்க நாணயங்களாகவிருக்கக்கண்டு நாம் இதைச் சரிபாகமாகப் பங்கிட்டு எடுத்துக்கொள்வோம் என்று தீர்மானித்துக்கொண்டு தாங்கள் உத்தேசித்துப் புறப்பட்ட ஊரை நோக்கிச் சென்றார்கள். அப்பொழுது கோடைகாலமாதலால் சூரியன் தன் கிரணங்கள் முழுவதையும் பூமியின் மேல் செலுத்தினான். ஆகையால் அவர்கள் வெயில் பொ

றுக்கமுடியாமல் களைத்துப்போய் தாங்கள் உத்தேசித்துவந்த கிராமத்திற்கு அரைமயில் தூரத்திற்கிப்புறமேயிருந்த ஓர் நந்தவனத்தைக் கண்டு அங்கு தங்கி சற்றுநேரமிருந்து பின் புறப்பட உத்தேசித்து அந்த நந்தவனத்திற்குட் புகுந்து ஓர் அழகான குளக்கரையிலிருந்த மரத்தின் நிழலில் உட்கார்ந்தார்கள். அங்குச் சற்று களைப்பாறினார்கள்.

அப்பொழுது அவர்களில் ஒருவன் மற்றவர்களைப் பார்த்து இங்கு ஏதாவது தின்பண்டங்ளிருந்து தின்றுவிட்டுப்போனால் சுகமாயிருக்கும் என்றான். மற்றவன் ஆம்! ஆம்! நீ சொல்லும் யோசனை நல்லதே! நான் வேண்டுமானால் சிரமத்தைப் பாராமல் ஊருக்குள் சென்று கடையில் ஏதேனும் தின்பண்டம் வாங்கிக்கொண்டு வருகிறேன் என்று சொன்னான். அதைக்கேட்ட மற்ற இருவரும் அப்படிச் செய்; இந்தா இந்த ரூபாய் ஒன்றையும் எடுத்துக்கொண்டு போய் நல்ல தின்பண்டங்களாக வாங்கிக்கொண்டு சீக்கிரமாக வா என்றார்கள். அவன் 'ஆகா, அப்படியே ஒரு நொடியில் வாங்கி வருகிறேன் "என்று கூறி அவ்விடம் விட்டுப்புறப்பட்டுக் கொஞ்சதூரம் சென்றான். எப்பொழுதும் மனிதன் தனித்திருக்கும்போதுதான் யோசனை தோன்றுவது வழக்கம். அதுபோல் இவனுக்கும் இப்பொழுது ஒருயோசனை தோன்றிற்று, அதாவது:—“இன்று கிடைத்த பணப்பையில் எவ்வளவு இருக்கிறதோ அதில் மூன்றில் ஒரு பாகம் நமக்குக் கிடைக்கும். அந்த ஒரு பாகம் கிடைத்தாலுமே நாம் பெரிய தனிகனாய்விடலாம். ஆயினும் மூன்று பாகத்திற்கும் நாமே உடையவனாய் விடின், பெரிய மாடமாளிகை கட்டிக்கொண்டு பூலோகதேவேந்திரன் போல் வாழலாம். நமக்கு இணை இங்கு ஒருவருமில்லையென்றே சொல்லவேண்டும். இதற்கு நாம் ஒரு உபாயஞ் செய்யவேண்டும், என்ன செய்பலாம்," என்று எண்ணிக்கொண்டே கொஞ்சதூரம் நடந்தான். அப்பொழுது "நாம் இவர்களுக்காக வாங்கும் தின்பண்டத்தோடு கொஞ்சம் விஷமும் வாங்கி

அதை அத்துடன் கலந்து கொடுத்து விடுவோமேயானல் தின்ற சற்று நேரத்திற் கெல்லாம் வாயைப் பிளந்து விடுவார்கள். பிறகு நாமே பொருளுக்குச் சுதந்தரவாதியாய் விடலாம்; இதைத்தவிர வேறு உபாயமில்லை" என்கிற இந்த அபாரத யுக்தி கண்டுபிடித்து வெகு வேகமாக கடைக்குச் சென்று முதலில் தனக்கு வேண்டிய தின்பண்டங்களை வாங்கி அங்கேயே உட்கார்ந்து நன்ருய்ப்புசித்து விட்டுப் பிறகு மற்றவர்கள் தின்பண்டங்களைக் வாங்கிக்கொண்டு அருகே யிருந்த மருந்துக்கடைக்குச்சென்று அங்கு கொஞ்சம் பாஷாணம் வாங்கி அத்துடன் கலந்து அதை எடுத்துக் கொண்டு வெகு சந்தோஷமாய் நந்தவனத்திற்கு வந்து கொண்டிருக்கிறுன்.

இது நிற்க, நந்தவனத்தின்கண் உட்கார்ந்திருந்த இரண்டு பேரும் ஒரு பெருய் யுக்தி செய்துவிட்டார்கள். சும்மாவிருக்கவில்லை. பணம் பெதிரில் பெரிப மூட்டையாயிருக்கும்போது சும்மாவிருப்பார்களாக? இருக்கமாட்டார்கள். ஆகவே ஒருவன்மற்றொருவனைப்பார்த்து. "நண்ப! இந்தப் பணப்பையை மூன்று பாகமாகச் செய்ப வேண்டியிருக்கிறது. மூன்றில் ஒரு பாகம் என்ருல் அதிகமாயிராது. நாம் இருவரும் பகிர்ந்து கொள்வதானுல் இருவருக்கும் போதுமானதாகும். இதற்கெப்படி யோசனை" என்றுன். இதைக்கேட்டதும் மற்றவன் "நண்ப! உன்மனதும் என் மனதும் ஒன்று என்பதை இப்பொழுது தான் கண்டேன். நீ யெப்படி யோசனை செய்தாயோ அதேவிதமாக நானும் யோசித்து அதைத் தெரிவிக்க வாயெடுத்தேன். நீயும் சொல்லிவிட்டாய். வெகு சந்தோஷம். நண்ப! இப்பொழுது அவன் கடையிலிருந்து வந்ததும் மெதுவாய் இந்தக்குளக்கரை யோரமாய் அழைத்து, அப்பால் அவனைக் குளத்தில்தள்ளிவிடுவோம். அவனுக்கு நீந்தத்தெரியாதாகையால் சிறிது நேரத்திற்கெல்லாம் இறந்து விடுவான். பிறகு நாம் நமது வேலையைப் பார்த்துக்கொள்வோம்" என்றுன். இதைக் கேட்ட மற்றவன் "நண்ப! நல்லயோசனை செய்தாப். சமயோ

சிதமான புத்தி சொல்வதற்கேற்ற நண்பனொருவனிருப்பானாகில் அவனுக்கு நினைத்த காரியம் கைகூடுவதில் தடையேயிராது என்பார்களே. அதை இப்பொழுது பிரத்தியட்சத்திற்கண்டேன். சரி அப்படியே செய்துவிடுவோம்'' என்று சொன்னான். இருவரும் அவன் வருகைக்கு எதிர்பார்த்திருந்தார்கள். அவன் சற்று நேரத்திற்கெல்லாம் வந்தான். வந்ததும் அவனை ஏதோகாரியமாக அழைப்பதுபோல் குளக்கரையோரமாக அழைத்து நொடிப்பொழுதில் வேலையை முடித்து விட்டார்கள். உடனே பணப்பையையும் அவன் கொண்டுவந்த தின்பண்டங்களையும் எடுத்துக்கொண்டு வேறொரு இடத்திற்குச்சென்று அங்குட்கார்ந்து தின்பண்டத்தைபவிழ்த்து, இருவரும் தின்றார்கள். தின்ற இரண்டு நிமிஷத்திற் கெல்லாம் ஒருவன் "இதென்ன தலை சுற்றுகிறதே. என்னமோ ஒரு மாதிரியாக விருக்கிறதே" என்றான். மற்றவன் "அடே; எனக்கும் அப்படியேயிருக்கிறதடா! ஐயோ! அவன் ஏதாவது தின்பண்டத்தில் விஷங்கலந் திருப்பானென்றெண்ணுகிறேன். நாம் அவனை மோசஞ்செய்யக் கருதியதுபோல் அவனும்நம்மை மோசஞ்செய்யக் கருதியிருப்பான் போற்காண்கிறது" என்றான். இதைக்கேட்டதும் ஆமாடா! அடே ஆமா! "கெடுவான் கேடுநினைப்பான்" என்பதுபோல் நாம் அவனுக்குக் கேடுநினைத்தோம் அக்கேடு நமக்கேவந்துவிட்டது. வந்தது முழுதும் இந்தப் பாழும் பணத்தாலேயே! அவன் நமக்கு ஆருயிர்த் தோழனாயிருந்ததையும் மறக்கச்செய்து அவனைக் கொல்லத்தூண்டியது இந்தப் பணந்தானே. "சீ இதன் முகத்தில் இனி விழியேன்" என்று கூறிப் பணப்பையை ஓர் உதை உதைத்து அந்த வண்ணத்திலேயே மலர விழுந்து உயிரிழந்தான். மற்றவன், "நாம் எண்ணி வந்ததென்ன, முடிந்ததென்ன, சந்தோஷமாயிருக்க வேண்டிய சமயத்தில் இந்தக்கதி வாய்த்ததே. சீ! பணம் பொல்லாது "ஜீவ காருண்யம்" என்பது உற்பத்தியானது எங்கு என்றால், என் மனதிலொன்று கூறவேண்டும். அப்படிப்பட்டவனையே இந்தப் பாழும் பணம் மயக்கி நண்பனைக் கொலைபுரியத் தூண்டிற்று. ஒரு

வருமில்லாத இந்த நந்தவனத்தில் உயிரிழக்கவும் செய்தது" என்று சொல்லிக்கொண்டே கண்ணில் நீர் தாரைதாரையாகப் பெருக உயிர் துறந்தான்.

பணம் செய்த வேலையைப் பார்த்தீர்களா? இது மட்டுமல்ல இது செய்வது! இதைப் போன்ற இலட்சம் கதைக்கும் இந்தப் பணம் இடந்தரும்.

(Money makes many things) கஜாம்பிகை

ஹிதோபதேசம்.

எவன் தர்மிஷ்டன்? எவன் சர்வஜகத்காரண மூர்த்தியின் உண்மைபக்தன்? எவன் புண்ணியவான்? எவனுக்கு புண்ணிய உலகத்தில் இடமுண்டு? எவன் மரணதுக்க நிவாரணம் பெறுவான்? என்னும் கேள்விகளைக்கேட்டு ஆராய்வோமாயின், எவன் எதைத்தன் பொருட்டாக விரும்புகிறானோ அதையே தன்கூடப் பிறந்த சகோதரர்களுக்கும் விரும்புகிறவனே தர்மிஷ்டன், பக்தன், புண்ணியவான், என்பதற் குரியவனுவான். அவனுக்கே சொர்க்கத்தில் இடங்கிடைக்கும். மரணதுக்கநிவாரணமும் அவனுக்குண்டு என்பது புலப்படும்.

2. 'நூற்பலகல்" என்பது ஆன்றோர் கூற்று. அதுவும் "இளமையிற்கல்" என்றார் "கல்வியினூங்கில்லைச் சிற்றுயிர்க் குற்ற துணை? என்றார். இவைகளைத்தினமும் சிந்தித்து மாணுக்கர்கள் சோம்பலாயிராமல் கல்விகற்று வரவேண்டும். இவ்வளவு வாக்கியங்களும் கல்வியின்மகிமையை விளக்கவெழுந்த வைகளெனவறிக. கல்

விக்கு எவனும் உயிரைக் கொடுக்கவேண்டும். அவனே இறவாதனுவவான்.

3. ‘குருவில்லாவித்தைபாழ்’’ என்பது ஆன்றோர்வசனம். ஆதலால் குருவை வழிபட்டு அவர்பால் கேட்டு ஐயமறக்கற்று உணர்தல்வேண்டும். குருவைக்கடவுளாகப்பாவிக்க வேண்டும். குரு எந்த மதத்தினனாயினும் நிந்திக்கலாகாது. கல்விமானை நிந்திப்பானாயின், அதுதெய்வத்தை நிந்தித்ததற்கொப்பாகும். அப்படியாயின் கல்வியறிவூட்டிய குருவை இகழ்தல் தகுமோ ?

4. ஒருகாரியத்தைச் செய்யத்தொடங்குமுன் தீரயோசிக்க வேண்டும். தீரயோசியாமல் திடீரென்று ஒன்றைமுடிக்கக் கருதி அதில் பிரவேசிப்பது தீமைதரும்.

5. “எறும்பூரக்கற்குழியும்’’ என்பது பழமொழி. இதைப் பற்றி ஆராயின், நாளடைவில் சிறிது சிறிதாகச் செய்யப்படும் காரியம் கைகூடுமென்பது நன்குபோதரும். “பலதுளிபெருவெள்ளம்’’ என்பதும் இதனைவிளக்கும். ஆகவே எதிலும் தீவிரமாகச் செய்தோ அல்லது ஒருமுறைசெய்து பார்த்து முற்றுப்பெறாமை கண்டோ அதிருப்தி கொள்வது பிசகு. பொறுமையுடன் நிதானமாகவும் சிறுகச்சிறுகவும் காரியத்தை முடிக்கவேண்டும்.

6. பொறாமைக்குணம்பொல்லாது. இதனைச் சிலர் தன்னுடன் கொண்டே பிறக்கிறார்கள். இவர்களுக்கு உலகத்தில்யெல்லாரும் பகைவர்களாகிறார்கள். அப்பொழுது தங்களிடத்துள்ள பொறாமைக்குணம்பொல்லாதென்பதை ஒழிக்க எண்ணாமல் வருந்துகிறார்கள். தன் குற்றத்தைக் களையமுயல்பவனே முன்னுக்குவருவான். அவனுக்கே உலகம்பரிந்து நிற்கும். அவனுக்குக் கடவுளும் கருணை புரிவார்.

லலிதாம்பிகை

ஜேம்ஸும் ராபர்ட்டும்.

ஜேம்ஸ், ராபர்ட் என்றிரண்டு சகோதரர்களிருந்தார்கள். ஒருவனுக்கேழுவயது. மற்றவனுக்கு ஐந்துக்கும் குறைந்ததாயிருந்தது. ஜேம்ஸ் என்பவன் நல்ல புத்தியும் குணமும் உடையனுயிருந்தான். ராபர்ட்டும் நல்லவன்தான். ஆனுல் சிறியவனுயிருப்பதால் குறைந்த புத்தியுடையவனு யிருந்தான். அடிக்கடி பிழைகள் செய்தான். ஒருநாள் இந்த இரண்டு பையன்களும் வயல்களில் உலாவினுர்கள். அவர்கள் நெடுகே போய்க்கொண்டிருக்கும்போது ராபர்ட் என்பவன் ஒரு பட்சியின் கூட்டை ஒருபுதரில் கண்டான். இவர்கள் சமீபமாய்ப் போனவுடன் தாய்ப்பறவை பறந்துபோயிற்று. அவர்கள் உள்ளேபார்க்கும்போது தாய்ப்பறவை அப்பொழுது இரை கொடுத்துக் கொண்டிருந்த மூன்று பறவைக் குஞ்சுகள் இருந்தன. ராபர்ட் அவைகளை வெளியே எடுத்து வீட்டிற்குக் கொண்டுபோக ஆசைப்பட்டான். ஆனுல் ஜேம்ஸ்என்பவன் அவனைத் தடுத்து என்தகப்பனுர் பறவைகளின் கூட்டைத்திருடுவது தப்பு என்று சொன்னுர் என்றுன். நம்முடைய தாய், தந்தையர் நம்மை எப்படி நேசிக்கிறுர்களோ அதுபோலவே பறவைகளும் தன் குஞ்சுகளை நேசிக்கின்றன. யாராவது கெட்ட மனிதன் நம்முடைய வீட்டுக்குவந்து! நம்மையும், சிறு குழந்தைகளையும் எடுத்துக் கொண்டு போய்விட்டால் நம்முடைய பெற்றேர்கள் எப்படி வருத்தப் படுவார்களோ அதேமாதிரி அவைகளும் தங்கள் குஞ்சுகளை யாராவதுஎடுத்துக் கொண்டு போய்விட்டால் வருத்தப்படுகின்றன. இதுவும் தவிர சிறு பறவைகள் தாயின் சம்ரட்சணையில் இருந்தால் தான் ஜீவித்திருக்கும், என்றுன். ராபர்ட் என்பவனிதைப் பற்றி முன்னே ஒன்றும் நினைக்கவில்லை பறவைக்குக் கூட அவ்வளவுவருத்த முண்டாக்குவதுதப்பென்று இப்போது தெரிந்து கொண்டு தன் சகோதரனுடைய புத்திமதியின்படி நடக்கத் தீர்மானித்தான். ஜேம்ஸ் ராபர்ட் இவர்களின் தந்தை இவர்கள் சம்பாஷணையைப் புதரின் அப்புறத்திலிருந்து கேட்டுக் கொண்டிருந்தார்.

அவர் உடனே அவர்கள்முன்னிலேயில்வந்து, நீங்களிருவரும் நல்லவர்களாவீர்கள். உங்களை நான்மிகவும் நேசிக்கிறேன். ஒருபட்சியின் வருத்தத்தையும், தீங்கற்றஒருபிராணியைத்திருடும் ஒரு சிறுவனுடைய போக்கிரித்தனத்தையும் ஒத்துப்பார்தால், பட்சியின் வருத்தம் அற்பமானதாகவும், பையனுடைய செய்கை மிகவும் கொரேமானதாகவும் இருக்கும். இச்செய்கைகளைச் செய்யத்துணியும் பையன்கள் மிகவும் குரூரமானவர்களாவார்கள். அவர்கள் பிற்காலத்திலும் குரூரமானவர்களாகவே யிருப்பார்கள். ஆகையால் பட்சிகளின் கூட்டைத் திருடுவதற்கு முன்னமேயே அப்படிச் செய்தல் கூடாதென்றுணர்ந்த இரண்டு பையன்களைத்தாமடைந்தமைக்கு அந்தப்பையன்களுடைய தந்தை மிகவும் சந்தோஷமடைந்தார்.

கனகசபை

புராதனமெக்ஸிகோ. (Mexico)

அமெரிக்கா கண்டங்கள் கண்டு பிடிக்கப்பட்டது முதல், ஐரோப்பிய தேயத்தார் அக்கண்டங்களைத் தங்களுக்குள் பங்கிட்டுக்கொள்ள முயன்றார்கள். இப்படி முயன்றவர்களில் ஸ்பானியர்கள் (Spaniards) தான் அதிகப்பெயர் பெற்றவர்கள்.

கி. பி. 1519-ல் கார்டிஸ் (Corts) என்னும் ஸ்பானிய சேனாதிபதி மெக்ஸிகோ என்னும் நாட்டைத் தன் அரசன் ஆளுகைக்குள்ளாக்க முயன்றான். மெக்ஸிகோ என்னும் இராஜ்யம் இருபக்கங்களிலும் மலைத் தொடர்களை எல்லைகளாய்க் கொண்டிருந்தபடியால், நாட்டின் சீதோஷ்ண நிலைமையானது அதிக மேன்மையாயும் வயல்கள் செழிப்பாயும் இருந்தன. மலையடிவாரங்களில் தோப்புக

ளும் துறவுகளும், மலையடியிலிருக்கும் ஏரிகளின் மத்தியில்,புஷ்பத் தோட்டங்களும், பழமரங்களும் அடர்ந்ததீவுகளும்காணப்பட்டன. மேலும், படகுகள்போல் இங்குமங்கும் தள்ளிக்கொண்டுபோகக் கூடிய தீவுகளும், (floating islands) இருந்தன. அவைகள் தண் ணீரின் பேரில் ஊர்ந்துசெல்லும்பொழுது கண்டால், நாம் ஏதோ கனவுதான் காண்கிறோம் என்று நினைக்கத் தக்கவையாய் இருந் தன.

பள்ளத்தாக்கிலிருந்தது பார்ப்பவர் கண்களுக்குப் புலப்படு வது மற்றொன்று உண்டு. இரண்டு எரிமலைகள் விடாது கணகண வென்று எரிந்து கொண்டிருந்தன.

பள்ளத்தாக்கின் மத்தியில் அரசன் வசிக்கும் நகரம் இருந் தது. இதுதான் மெக்ஸிகோவின் பிரதானபட்டணம். நாகரிக மறிந்த ஸ்பானியர்கள் இவைகளையெல்லாம் கண்டபொழுது சற்று பிரமித்து நின்றார்கள். எல்டொராடோ (Eldorado) (பதார்த்த மாக பொன்னாலாகிய நகர்.) என்னும் பட்டணம் இதுதானோ வென்று சந்தேகித்தார்கள். இவ்விராஜ்யம் மாண்டிஜுமா (Monte zuma) என்னும் ஓர் அரசனால் ஆண்டுவரப்பட்டது.

ஸ்பானியர்களுடன் வந்த திலஸ்காலர்கள் (Tlascalans) அமெரிக்கா கண்டத்து சுயவாசிகளே. திலஸ்க்காலர்கள் என்பவர் கள் மாண்டிஜுமாவின் அண்டைஇராஜ்யத்தார். இவ்விரண்டு இராஜ்யங்களும் எப்பொழுதும்விரோதமுடையனவல்ல. ஆகையால் ஸ்பானியர்கள், மெக்ஸிகோவை ஜெயிப்பதற்கு, திலஸ்காலர்கள் அதிக உதவி புரிந்தனர்.

தங்கள் சுயதேசங்களை விட்டு, பொன்னாசையைத் தீர்க்கும், பொருட்டு கார்டிஸ் என்னும் சேனாதிபதியுடன் வந்த அனைவரும் மெக்ஸிகோ நகரைக்கண்டதும் அந்நகரவாசிகள் தங்களை விட அதிக நாகரிகமடைந்திருப்பதைக்கண்டு, அதைரியப்பட்டு, திரும் பிப்போக உத்தரவளிக்கும்படி சேனாதிபதியைக் கேட்டனர். சேனாதிபதியோ அதிக தைரியமுடையவர். கைக்கெட்டியதை

வாயில் போட்டுக்கொள்ளாமல் விடுவதில் அவனுக்கு மனம் வராமையால் தன்னுடன் வந்தவர்களுக்கு நல் வார்த்தைகள் சொல்லியும், மேக்ஸிகர்கள் சண்டை செய்வதில் தங்களையொத்தவர்கள் அல்லவென்றும் சொல்லி, அவர்களின் மனதில், முன்னிருந்த தைரியத்தைப் பதின்மடங்கு அதிகரித்தான்.

ஐரோப்பா முழுவதிலும், யுத்தம் புரிவதில் முதல் தரமானவர்களென்று பெயர் பெற்ற ஸ்பானியர்கள்கூட நாகரிகமற்றவர்கள் என்று கூறப்பட்ட மேக்ஸிகர்களின்முன் தைரியமின்றித் தடுமாறினார்கள்.

T. M. RAJGOAPALA CHARI

மந்திரத்தைப்பற்றியறிய வேண்டிய 13 வாக்கியங்கள்.

1. ஒருமந்திரவாதியானவன் தன்சரீரமுழுதும்வியாபித்திருக்கின்ற சுரம்போலுள்ள வியாதிகளுக்குத் தானே மந்திரித்துக்கொள்வதில் பிரயோஜனமில்லை. எதாகிலும் ஒருஅவயவத்தில் உண்டாயிருக்கும் உபத்திரவத்தை மட்டில் தன் தேஜோபலத்தினால் நிவர்த்தித்துக்கொள்ளலாம்.

2. பலதடவை மந்திரித்துக்கொண்ட ஒருவன் மந்திரத்தாலுண்டாகும் நிலைமைகளைத் தானுயடையலாம் இப்படிச்செய்வதினால் எகாக்கிரசித்தனாக இருந்து தியானம் செய்யப் பழக்கமுண்டாம்.

3, இப்படிச்செய்வதினால் நரம்புகள் சோர்வையடைந்து சரீரம் கெடுதியடையும்.

4 ஒருநோயாளியானவன் மற்றொருநோயாளியைக் கொண்டு மந்திரித்துக்கொள்ளக்கூடாது

5 மந்திரவாதியும் நோயாளியும் ஒருவாகானசரீரத்தை யுடையவர்களாக இருத்தல் நலம். இதைச் சிலதினங்கள் மந்திரிப்பதினால் உண்டாகும்பிரயோஜனத்தைக்கொண்டு தெரிந்துகொள்ளலாம்.

6. மந்தரித்தலானது ஸ்திரீபுருஷர்கள் யாவருக்கும் குணத்தைக் காண்பிக்கின்றது. ஆயினும் சிலரோகிகளிடத்திலும் சரீரசௌக்கியத்தை யுடையவர்களிடத்திலும் உபயோகப்படுகிறதில்லை.

7. மந்திரமானது நிர்மூடர்களாக இருக்கிறவர்களிடத்தில் சீக்கிரத்தில் குணத்தைக்காண்பிக்கிறது.

8. ஒருநோயாளிக்கு ஒருமந்திரவாதி மந்திரித்துப் பலிக்காவிட்டாலும் வேறொருமந்திரவாதி மந்திரித்ததலினல் குணமுண்டாம்.

9. நோயாளிக்கு மந்திரத்தால் குணம் உண்டாவது அவன் குணத்தைப் பொருத்திருக்கின்றது.

10. நோயாளி சம்மதமில்லாதவனுக இருந்து அவன் மனதினுலும் சரீரத்தினுலும் எதிர்த்தால் அவனிடத்தில் மந்திரம் ஜல்தியில் பலிக்கிறதில்லை

11. யாவரும் தங்கள் சரீரத்தை மந்திரசக்திக்கு உள்ளாக்கிக்கொள்வது நலம்.

12. மந்திரம்பலிப்பது பூமி, காற்று, சமீபத்திலுள்ளசராசரவஸ்துக்கள், இவைகளின்சீதோஷ்ணம், மந்திரமாவது நோயாளி, மந்தரிப்பவன் இவர்களுடைய குணம் சரீரவாக்கு இவைகளைப் பொருத்திருக்கின்றது.

13. மந்திரம் உஷ்ணதேசங்களில் சீக்கிரமாயும் நிச்சயமாயும் பயன்படுகின்றது.

வர்த்தமானம்.

பெண் கல்வி:—புனுவில் 8 பெண்கள் மெட்ரிகுலேஷன் பரீட்சைக்குப்யோய்ப் பரீட்சையில் தேறினர்கள். ஒரு பெண் மிஸ் யமுநாபாய் ஆத்மராம் தால்வி என்னும் சம்ஸ்கிருத ஸ்காலர்ஷிப்பில் பாதிஸ்காலர்ஷிப் பெற்றனள். இது சிலாக்கியமானதே.

ஆனரபில் கசிம்பஸார் மகாராஜா அவர்களின் சாஸ்திராபிமானம்:——நமதுபூர்வீகமான கணிதசாஸ்திரங்களையும் வானசாஸ்திரங்களையும் சம்ஸ்கிருதத்தினின்று வெளிப்படுத்தும்படி கல்கத்தா யூனிவர்சிடிக்கு ஆனரபில் கசிம்பஸார் மகாராஜா வருஷத்திற்கு 4000 ரூபாயாக (2 000. ரூபாய்) ஐந்துவருஷம் தருவதாக வாக்களித்திருக்கிறார். இஃது உத்தமமான தானங்களுள் ஒன்றும்.

பெரிய கடிகாரம்.

உலகத்தில் பெரிய கடியாரம் இதுதான் என்று சொல்லும்படியாக மின்சாரத்தாலோடும் கடியாரமொன்று லிவர்ப்பூல்பட்டினத்தில் வைக்கப்படப்போகிறது. இதன் முன்புறம் 220 அடி பூமிக்கு மேலிருக்கும் இதன் மணிமுள் 14 அடி நீட்டும், 3 அடி அகலமுமிருக்கிறது. நிமிஷம் ஒன்றற்கொன்று $3\frac{1}{2}$ அங்குல இடைவெளியிலிருக்கிறது. இதனுடன் மற்றொரு கடியாரம் பிணைக்கப்பட்டு அதற்கும் கிரீன்விச் மணிக்கும் சம்பந்தம் செய்து பெரிய கடிகாரத்திலேற்படும் பிசகுகள் திருத்தப்படும்.

வர்த்தமானம்.

பாளையங் கோட்டையில் குருடர் பாடசாலை:—இப்பள்ளிக்கூடத்துக்குத் திருச்சினாப்பள்ளியிலிருந்து மிஸஸ் மதுரம் 30 ரூபாயும், திவான்பகதூர் டி. தேசிகாசாரி 22 ரூபாயும். டாக்டர் ஞானஒளிவு 10 ரூபாயும், மிஸஸ் கோயில்பிள்ளை 10 ரூபாயும், மிஸ்டர்ஜே. ஞானமுத்து 5 ரூபாயும், திருநெல்வேலியிலிருந்து மிஸ்டர் எம். திருமலையப்ப முதலியார் 50 ரூபாயும், மிஸ்டர் வி. பி. சுப்ரமணிய முதலியார் 5 ரூபாயும், டாக்டர் நாராயணய்யர் 5 ரூபாயும்.நன்கொடையாக அனுப்பிய பணத்தை செக்ரிடெரி மிஸ் ஆஸ்குவித் சந்தோஷத்துடன் பெற்றுக்கொண்டிருக்கிறார்.

பங்களூரில் மகமதிய பிரைமரிப் படிப்பு.

பங்களூரில் மாடல் (மாதிரி) பிரைமரி மகமதிய ஸ்கூல் ஒன்று ஸ்தாபிக்க இந்தியா கவர்மெண்டார் ரூபா 10,000சாங்க்ஷன் செய்திருப்பதாகவும் பங்களூர் சிவில் அண்டுமிலிடரி ஸ்டேஷனில்பொதுப் பிரைமரிப் படிப்பின் அபிவிருத்திக்காக ரூபா 13,000 சாங்க்ஷன் செய்திருக்கிறார்களென்றும் தெரிகிறது. சமீபத்தில் நடந்த பங்களூர் முனிசிபாலடி மீட்டிங்கில் இந்தியா கவர்மெண்டார் உத்தரவு செய்திருக்கும் தொகைகள் வந்தனத்துடன் ஏற்றுக்கொள்ளப்பட்டன.